**இலங்கை பட்மின்டன் சங்கம் - 2018**

-----------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பட்மின்டன் சங்கத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து சங்கத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சங்கத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சங்கத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சங்கம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நியமத்தின் 17 ஆம் பகுதியின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்பு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக, தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு ரூபா 233,490 கிரயத்திலான கணனி உபபாகங்கள் முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 10 ஆம் அத்தியாயத்தின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள கணனி உப பாகங்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் 52 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களினால் அனுமதிக்கப்பட்டவை தவிர வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று தீர்ப்பனவுசெய்யப்படக்கூடாத போதிலும், மீளாய்வாண்டினுள் ரூபா 42,044,023 கூட்டுத் தொகையான வருமானங்களில் ரூபா 29,269,541 கூட்டுத் தொகையான வருமானங்கள் ஈடுசெய்யப்பட்டு ரூபா 12,774,482 விரிவான வருமானக் கூற்றில் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானம் மற்றும் செலவினங்கள் வெவ்வேறாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (iii) | நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 31(இ) பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு விகிதம் வெளிப்படுத்தப்படுத்தப்படாமல் 2 சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 45,906 பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | உரிய பெறுமானத்தேய்வு வீதத்தை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 145,959 குறைபாடுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திருத்தமாக நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 24,920 கூட்டுத்தொகையான 06 வருடங்கள் பழமையான 02 பெறவேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 109,446 கூட்டுத் தொகையான 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 02 பழைய கணக்கு மீதிகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | அறவிட முடியாத பெறவேண்டிய பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அறவிடமுடியாத மீதிகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அட்டுறு செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுக் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காணப்பட்ட ரூபா 2,290,429 கூட்டுத்தொகையான 15 கணக்கு மீதிகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 4 ஆண்டுகளுக்கு 6 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 3,746,110 கூட்டுத்தொகையான 04 கணக்கு மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், செலுத்தவேண்டிய ரூபா 19,300 தொகையான ஊழியர் சேமலாப நிதி மீதி மற்றும் ரூபா 10,680 தொகையான ஊழியர் நம்பிக்கை நிதி மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அட்டுறு செலவினங்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளி தரப்பினருக்காக செலுத்த வேண்டிய தொகை தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 757 | ஆண்டின் இறுதியில் சொத்துக்கள் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்துரை தெரிவித்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் சொத்துக்கள் முறையான பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சங்கத்திற்கு சொந்தமான ரூபா 3,271,021 தொகையான நிலையான சொத்துக்கள் முறைப்படி பதிவேடுகளுக்கு உட்படுத்தி நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்துரை தெரிவித்திருக்க வில்லை. | 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,104,178 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 6,184,395 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,080,217 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 3,197,868 ஆல் குறைவடைந்தமை, நிர்வாகச் செலவினம் ரூபா 546,874 ஆல் அதிகரித்தமை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட செலவினம் ரூபா 1,244,044 ஆல் அதிகரித்திருந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சங்கத்தின் ரூபா 42 மில்லியனான வருமானமொன்றும் ரூபா 39.9 ஆன செலவினமொன்றும் காணப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 11.6 மில்லியனாக இருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் சங்கத்திற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை தாபிப்பதற்கு எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும். | உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை தாமதமின்றி தாபிக்கப்படல் வேண்டும் |

### 3.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக சங்கத்தினால் பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீடு சமர்ப்பிக்கப்படும். | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் விலகல் தொடர்பாக உரிய நேரத்தில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |